# அரசியல் தத்துவம்



www.e-thaksalawa.moe.gov.lk

The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

wa.moe.gov.lk

❖ **தேர்ச்சி :-** அரசறிவியல் பாடத் துறையில் உள்ளடங்கும் கரும் பொருட்களை அறிந்து அரசறிவியலை அறிந்து கொள்வதற்கான தன்னை தயார்படுத்தி கொள்வார்

❖ **தேர்ச்சி மட்டம் :- 2.1** அரசியல் தத்துவத்தின் இயல்புகளையும் உள்ளடக்கத்தையும் கற்பர்.

❖ **உப அலகு :- 2.1** அரசியல் தத்துவம்

## அரசியல் தத்துவம்

- புராதன கிரேக்க காலத்தில் இருந்து தற்காலம் வரை அரசியல் ஆய்வு உள்ளடங்கும் உப பிரிவாக அரசியல் தத்துவத்தினை குறிப்பிடலாம்
- அரசியல் அறிவின் முதிர்ச்சி நிலையினை தேடுவது அரசியல் தத்துவம் ஆகும். அரசியல் கற்றல் பிரிவில் பொதுவான விதிகள் அல்லது கொள்கைகள் கூட்டுச் சேர்வதை இது குறிக்கின்றது. இதனால் அரசியல் தத்துவம் என்பதை அரசியல் விதிகள் அல்லது அரசியல் கொள்கைகளின் தொகுப்பு எனலாம்
- அரசியல் தத்துவத்தை அரசியல் தத்துவ ஞானிகள் வகுக்க முயன்று வருகின்றனர்

## அரசியல் தத்துவத்தின் பிரதான கருப் பொருள்கள்


| அரசியல் விபரிப்பில் எண்ணக் கருக்களின் வரைவிலக்கணங்கள் | அரசியலில் அடிப்படைப் பிரச்சனைகளை வெளிப்படுத்தி ஆய்வு செய்தல் | அரசியலுக்கான இலட்சிய கோட்பாடுகளை முன் மொழிதல் |
|---|---|---|
| உதாரணம் | உதாரணம் | உதாரணம் |
| அரசு | அரசு என்பது யாது? | சுதந்திரம் |
| அதிகாரம் | அரசு ஏன் அவசியம் ? | சமத்துவம் |
| பிரஜாவுரிமை | அரசின் தோற்றம் எவ்வாறானது ? | நியாயத்தன்மை (ஒப்புரவு ) |
| சுதந்திரம் | அரசியல் என்பது யாது? | பொதுநலன் |
| உரிமைகள் | | சமூக விடுதலை |
| சமத்துவம் | | |

தொகுப்பு :- திருமதி . பிரமாலட்சுமி ஜனேந்திரன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு க .வினுஜன், ஆசிரியர்- த.தொ.தொ, (யா/வட்டு இந்துக்கல்லூரி )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**புராதன கிரேக்க யுகத்தில் இருந்து தற்காலம் வரை அரசியல் தத்துவம் கரிசனை கொண்ட கருப்பொருள்கள்**




**அரசியல் தத்துவவியலாளர்களால் அரசியல் கருத்தியல்கள் அரசியல் தத்துவமாக்கப்படும் போது கையாளப்படும் முறைமைகள்**

- கலந்துரையாடல்
- விவாதம்
- கருத்தாடலுக் குட்படுத்தல்
- கருத்தியல்கள் தொடர்பாக அரசியல் தத்துவவியலாளர்களிடையில் பொது இணக்கப்பாடு காணப்படாமலும் தனிமையாக்கப்பட்ட கருத்தியலாகவும் காணப்பட்டு அரசியல் தத்துவமாக மிளிரும்.

தொகுப்பு :- திருமதி . பிரமாலட்சுமி ஜனேந்திரன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு க .வினுஜன், ஆசிரியர்- த.தொ.தொ, (யா/வட்டு இந்துக்கல்லூரி )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**அரசியல் தத்துவம் கரிசனை கொள்ளும் கருப்பொருள்களும் அதனை ஆய்வு செய்த தத்துவவியலாளர்களும்**

| கருத்தியல் | தோற்றம் மத்திய தற்கால அரசியல் தத்துவவியலாளர்கள் | தற்கால அரசியல் தத்துவவியலாளர்கள் |
|---|---|---|
| நீதி / நியாயத் தன்மை | பிளேட்டோ, அரிஸ்ட்ரோட்டில், புனித அகஸ்தீன், புனித அக்குவானஸ், தோமஸ்கொப்ஸ்,டேவிட்கியும், இமானுவேல் கான்ட், ரூசோ, ஜோன் ஸ்ருவாட்மில் , கார்ள்மாக்ஸ். | ஜோண் ரோல்ஸ், றொபட் நோஸிக், மைக்கல் சென்டல், மார்த்தா நஸ்பவுன், மகாத்மா காந்தி |
| சமத்துவம் | அரிஸ்ரோட்டில், ஹொப்ஸ், ஜோன்லொக், ரூசோ, மில், மாக்ஸ், எலக்ஸி டி தொக்வில், ஹோர்பட் ஸ்பென்சர், ஸ்ரீயுகோ, குரோசியஸ், மானுவேல் கான்ட் | மகாத்மா காந்தி, மைக்கல் ஹோல்ட்டர், சார்ள்ஸ் டெய்லர், றொனால்ட் டிவோகின் |
| உரிமைகள் | கான்ட், தொக்வில், லொக் ஹியும் , அடம்ஸ்மித், மாக்ஸ் மொண்டஸ் கியூ . | ஆயிஷா பேர்லின், றொனால்ட் டிவோ-கின், ஜோண் ரோல்ஸ், சார்ள்ஸ் டெய்லர் |
| சுதந்திரம் | பிளேட்டோ , அரிஸ்ட்ரோட்டில், ஹாப்ஸ், லொக், மாக்ஸ் ஜெரேமி பென்தம் | ஆயிஷா பேர்லின், பெற்றிக் விரயக், ஜோண் ரோல்ஸ், பிலிப் பெட்டி |
| அரசியல் இயல்புகள் | பிளேட்டோ , அரிஸ்ட்ரோட்டில், புனித அகஸ்தீன், மாக்கியா வல்லி , ஹொப்ஸ், லொக், ரூசோ, கான்ட், ஹெகல் மாக்ஸ் | சி.ரைட்மில், யேஹேன் ஹபர்மஸ், சார்ள்ஸ் டெய்லர், மிஷேல் பூகோ |
| அரசின் இயல்புகள் | ஹொப்ஸ், லொக், ரூசோ, மாக்கியா வல்லி, மாக்ஸ் | ஜோண் ரோல்ஸ், யேஹேன் ஹபர்மஸ், சார்ள்ஸ் டெய்லர் |


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அரசியல் தத்துவவியலின் மேல் நோக்கிய வளர்ச்சி

- 19ம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் தத்துவவியலுக்கு அரசியல் ஆய்வில் உயர் இடம் கிடைத்தாலும்
- 20ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் ஓரளவு பின்னிலை அடைந்தது அவ்வாறானதொரு நிலை-யை அடைவதற்கு அரசறிவியலில் விஞ்ஞான எதிர் வாதங்கள் மேலெழுந்தமையே காரணமாகும்.
- 1970 தசாப்தங்களின் ஆரம்பத்தில் இருந்து மீண்டும் அரசறிவியலில் தத்துவ வாதத்திற்கு முக்கியத்துவம் கிடைத்தது இதனால் அரசறிவியல் விபரிப்பில் இழந்த நன்மதிப்பு இடம் என்பன திரும்ப கிடைத்தது .
- இந்த மாற்றமானது 1971ம் ஆண்டில் அரசியல் தத்துவ ஞானி ஜோன் ரோல்ஸ் அவர்களின் A Theory of Justice (நீதி தொடர்பான கோட்பாடுகள் ) என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டே ஏற்பட்டது.
- இதனோடு தத்துவ ஞானிகள் அரசறிவியலாளர்கள் மற்றும் சமூகக் கோட்பாட்டாளர்களுக்கு இடையில் ஏற்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் அரசியல் தத்துவவியலை மீண்டும் மேல் நோக்கி கொண்டு வருவதற்கு அடிப்படையாக அமைந்தது

## வினாக்கள்

- அரசறிவியல் பாடத் துறையில் அரசியல் தத்துவத்தின் முக்கியத்துவத்தினை விளக்குக.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk